

# திருத்தூதர் யோவான் நற்செய்தியில் ஆண்டவரின் இறுதி இரவு உணவு

## ஒரு சிறப்புக் கண்ணோட்டம்

இரான்சம் அமிர்தமணி

அன்பின்மடல்

# திருத்தூதர் யோவான் நற்செய்தியில் ஆண்டவரின் இறுதி இரவு உணவு ஒரு சிறப்புக் கண்ணோட்டம்

திருவழிபாட்டு ஆண்டில் தவக்காலம் என்னும் புனித நாள்களைப் பக்தியோடு நாம் கடைபிடித்து வருகின்ற இந்தக் கட்டத்தில், தவக்கால வழிபாடுகளின் உயர்நிலைகளில் ஒன்றாகிய "ஆண்டவர் இயேசுவின் இறுதி இரவு உணவு" நிகழ்வினை சற்று ஆழமாக ஆய்ந்து அறிவது பயனுள்ளதாக இருக்கும். திருவிவிலியத்தில் இருக்கின்ற நான்கு நற்செய்தி நூல்களுமே இந்த முக்கியமான நிகழ்வினை பதிவு செய்திருந்தாலும், திருத்தூதர் யோவானின் நற்செய்தியில் இந்த நிகழ்வு, அவர் எடுத்துரைக்கின்ற செய்திகளிலும், உரைக்காமல் விடுத்த செய்திகளிலும், மற்ற மூன்று நற்செய்தி நூல்களிலிருந்து வேறுபட்டுக் காணப்படுகிறது. இயேசு தன் சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்ற நிகழ்வு யோவான் நற்செய்தியில் மட்டுமே விவரிக்கப்பட்டாலும், திருநற்கருணை என்னும் அருள்சாதனத்தை இயேசு நிறுவுகின்ற நிகழ்ச்சியை யோவான் எடுத்துரைக்கவில்லை. திருநற்கருணையை இயேசு நிறுவுகின்ற நிகழ்வு ஏனைய மூன்று நற்செய்தி நூல்களிலும், திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்திலும் ஒரேமாதிரியாக விளக்கப்படுகிறது (மத்தேயு 26:26-29; மாற்கு 14:22-25; லூக்கா 22:15-20; 1 கொரிந்தியர் 11:23-26). "முதன்மையானத் தலைவனைப் போல் அல்லாமல், ஒரு பணியாளனைப் போன்ற தாழ்ச்சியுடன் நடந்து கொள்வதற்கான அடையாளமாகப் பாதம் கழுவுகின்ற நிகழ்வினை இயேசு செய்து காட்டினார்" என்று கிறிஸ்தவ பாரம்பரியம் நமக்கு அறிவுறுத்துகிறது.

ஆண்டவர் இயேசு தன்னை சிலுவையில் பலியாகக் கையளிப்பதற்கு முந்தைய நாள் மாலையில் நடைபெற்ற இந்த இறுதி இரவு உணவு நிகழ்ச்சி ஏறக்குறைய மூன்று மணி நேரம் நடந்திருக்கலாம். திருத்தூதர் யோவான் தனது நற்செய்தி நூலில் உள்ள இருபத்தொன்று அதிகாரங்களில் ஐந்து அதிகாரங்களில் (13 முதல் 17 வரை) இந்த மூன்று மணி நேர நிகழ்ச்சிகளை விவரிக்கின்றார். யோவானின் நற்செய்தி நூலில் இந்தப் பகுதிகளை ஆழமாகவும், கவனமாகவும்

படிக்கும்போது, நூலின் ஆசிரியர் சொல்ல விழைகின்ற கருத்துக்களை ஒரு புதிய கண்ணோட்டத்தில் உணர முடிகிறது. தனது நற்செய்தி நூலின் பதிமூன்றாம் அதிகாரத்திலிருந்து ஆண்டவருடைய இறுதி இரவு உணவு நிகழ்ச்சியை யோவான் எடுத்துரைக்கின்றார். இந்த அதிகாரத்தின் அமைப்பு இதற்கு முந்தைய அதிகாரங்களின் அமைப்பு முறையிலிருந்து குறிப்பிடத் தக்க வகையில் மாறுபடுகிறது. பன்னிரெண்டாம் அதிகாரத்தின் இறுதி வரிகள், இயேசு பொதுமக்களிடையே உரையாற்றுவதன் முடிவாக உள்ளன. உரத்தக் குரலில் இயேசு பொதுமக்களுக்குச் சொல்லுகின்ற கடைசி வார்த்தைகள், அவர் மானிட உருவெடுத்ததன் நோக்கத்தை வலியுறுத்துவனவாக இருக்கின்றன. (யோவான் 12:44; 7:28.37). இதற்குப் பிறகு, தன்னை சிறைபடுத்தி விசாரணை செய்வோருக்கு மறுமொழி சொல்வதை தவிர, தன்னுடைய சீடர்களிடம் மட்டுமே இயேசு உரையாடுகிறார். பதிமூன்று முதல் பதினேழு வரையுள்ள அதிகாரங்கள் ஒன்றிணைந்த ஒரு பகுதியாக அமைந்துள்ளன. பதிமூன்றாம் அதிகாரத்தின் முதல் மூன்று வசனங்கள், அடுத்து நடக்க இருக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு அடித்தளமாகின்றன. முதல் வசனத்தில் காணப்படுகின்ற ‘பாஸ்கா விழா’, ‘நேரம்’, ‘தமக்குரியோர் மேல் அன்பு’ மற்றும் ‘இறுதிவரையும் அன்பு’ ஆகிய நான்கு வார்த்தைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

<u>பாஸ்கா விழா:</u>

பாஸ்கா விழா யூதர்கள் கொண்டாடிய முக்கியமான பண்டிகை. நானூறு ஆண்டுகளுக்கு மேலாக எகிப்து நாட்டில் கட்டுண்டிருந்த அடிமைத்தளையிலிருந்து விடுதலை பெற்றதன் நினைவாக ஒவ்வொரு ஆண்டும் யூதமக்கள் வெகுசிறப்பாகக் கொண்டாடிய திருவிழா. ஆண்டவர் எகிப்து நாட்டின் தலைச்சன் பில்லைகளைத் தாக்குவதற்காகக் கடந்து செல்கையில், கதவின் மேல்சட்டத்திலும் இரு நிலைக்கால்களிலும் இரத்தத்தைக் கண்டு அந்த வீட்டைக் கடந்து சென்று, யூதர்களின் தலைபிறப்பு அனைத்தையும் காப்பாற்றிய நிகழ்வை யூதமக்கள் இந்தப் பண்டிகையின்போது நினைவுகூர்ந்தார்கள். கிறிஸ்தவர்களாகிய நமக்குப் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்படைந்ததை நினைவூட்டும் முன்னோடியாக இந்த விழா திகழ்கிறது.

மேலும், தொடக்க நூல் இருபத்திரெண்டாம் அதிகாரத்தில், ஆபிரகாம் மிகவும் அன்பு செய்கின்ற தன் ஒரே மகன் ஈசாக்கை (இந்த "ஒரே மகன்" என்னும் வார்த்தை மறைமுகமாக இயேசுவைக் குறிப்பதாகக் எடுத்துக் கொள்வது சரியே) தனக்கு எரிபலியாக அளிக்கவேண்டுமெனக் கடவுள் அவருக்குக் கட்டளைக் கொடுக்கின்றார். மறைநூல்களைக் கற்றுத் தேர்ந்த யூதர்கள் ஈசாக்கை பலியாக்க வேண்டிய நிகழ்வோடு பாஸ்கா விழாவையும் தொடர்பு செய்து நினவுகூர்ந்தார்கள். பலி செலுத்த வேண்டிய இடத்திற்குச் செல்லும் வழியில், ஈசாக்கு தன் தந்தையாகிய ஆபிரகாமை நோக்கி "இதோ நெருப்பும் விறகுக் கட்டைகளும் இருக்கின்றன. எரிபலிக்கான ஆட்டுக்குட்டி எங்கே?" என்று கேட்கிறான். அதற்கு ஆபிரகாம், "எரிபலிக்கான ஆட்டுக்குட்டியை கடவுளே பார்த்துக்கொள்வார், மகனே"என்றார். இந்த வார்த்தைகளை ஆபிரகாம் தற்செயலாகக் கூறினாலும், அது அவர் அறியாமலேயே முன்னுரைத்த இறைவாக்கு போலாயிற்று. உண்மையாகவே நம்முடைய குற்றங்களுக்காகப் பலியாவதற்கான ஆட்டுக்குட்டியாகத் தன் ஒரே பேறான அன்பு மகனை அளித்திட கடவுள் திருவுளம் கொண்டார்.

யாவே கடவுள் தங்களுக்குச் செய்த மாபெரும் விடுதலை நிகழ்வை நினைவுகூரும் விதமாகப் பாஸ்கா விருந்து இருந்தது. இயேசு தம்மிடம் வருவதைக் கண்ட திருமுழுக்கு யோவான், "இதோ! கடவுளின் ஆட்டுக்குட்டி! இவரே உலகின் பாவத்தைப் போக்குபவர்" என்று இயேசுவைத் தன் சீடர்களுக்கு அறிமுகம் செய்கிறார். (யோவான் 1:29, 36). தனது நற்செய்தி நூலின் பதிமூன்றாம் அதிகாரத்தின் தொடக்கத்தில், "தாம் இவ்வுலகத்தை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டது என்பதை இயேசு அறிந்திருந்தார்" என்று கூறுகின்ற திருத்தூதர் யோவன், அன்றைய இரவு உணவின் மேன்மையை வலியுறுத்தும் விதமாக, "பாஸ்கா விழா தொடங்கவிருந்தது" என்ற வரிகளை அந்த அதிகாரத்தின் முதல் வாக்கியமாக வைக்கிறார். தன்னையே பலியாக்க வேண்டிய உண்மையான, உன்னதமான பாஸ்கா விழா மிகவும் அண்மையில் உள்ளது என்றும், அதற்கு இன்னும் சில

மணி நேரங்களே இருக்கின்றன என்றும் இயேசு திண்ணமாக அறிந்திருந்தார். இதனையே கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் (5:7) "நம் பாஸ்கா ஆடாகிய கிறிஸ்து பலியிடப்பட்டிருக்கிறார்" என்று திருத்தூதர் புனித பவுல் எடுத்துரைக்கின்றார்.

<u>நேரம்</u>:

அடுத்த முக்கியமான வார்த்தை இயேசுவுக்குரிய நேரம். இயேசுவின் போதனைகளை விவரிப்பதற்கு, 'அடையாளங்கள்', 'உயிர்', 'ஒளி', 'உண்மை', 'அன்பு' மற்றும் 'நேரம்' ஆகிய வார்த்தைகளைக் கருப்பொருள்களாக யோவான் கையாண்டிருப்பதைத் தெளிவாகக் காணலாம். பதிமூன்றாம் அதிகாரத்தின் தொடக்க வரிகளில் பயன்படுத்தப்பட்டுள்ள "நேரம்" என்னும் சொல் நம் கவனத்தை ஈர்க்கிறது. திருத்தூதர் யோவான் "நேரம்" என்னும் வார்த்தையைக் கீழ்க்கண்டவாறு மூன்று விதமாகப் பயன்படுத்துவதை பார்க்கிறோம்:

1) முதல் அதிகாரத்தில் 39-ஆம் வசனத்தில், திருமுழுக்கு யோவானின் இரண்டு சீடர்கள் இயேசுவை பின்தொடர்ந்து சென்றபோது, அந்த நாளின் பொழுதைச் சுட்டிக்காட்டுவதற்காக "அப்போது ஏறக்குறைய மாலை நான்கு மணி" என்று யோவான் குறிப்பிடுகிறார்; நான்காம் அதிகாரம் 6-ஆம் வசனத்தில் சமாரிய பெண்ணோடு இயேசு உரையாடுகின்ற பகுதியில், "அப்போது ஏறக்குறைய நண்பகல்" என்று சொல்கிறார்; அதே அதிகாரத்தில் 52, 53 — ஆம் வசனங்களில் அரசு அலுவலரின் காய்ச்சல் நீங்கிய நேரத்தை, "பிற்பகல் ஒருமணிக்கு காய்ச்சல் நீங்கியது"என்று பணியாளர்கள் கூறுவதாக எழுதுகிறார்; கடைசியாகப் பத்தொன்போதாம் அதிகாரம் 27-ஆம் வசனத்தில், கொல்கொதா குன்றில் சிலுவையில் தொங்கிய இயேசு, "இவரே உம் தாய்" என்று மொழிந்தபோது, "அந்நேரமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்" என்று குறிப்பிடுகிறார்.

2) புதியதொரு காலக்கணிப்பு: நான்காம் அதிகாரத்தில் சமாரியப் பெண்ணோடு உரையாடுகின்ற வேளையில், "உண்மையாய் வழிபடுவோர் தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில்" வழிபடுகின்ற காலத்தைப் பற்றிக் கூறுகையில், "அம்மா, என்னை நம்பும். காலம் வருகிறது.... ஏன், வந்தேவிட்டது!" என்று உணர்ச்சி பெருக்கோடு சொல்கிறார். அதே போல, ஐந்தாம் அதிகாரம் 25, 28 ஆகிய வசனங்களில் இறைமகனின் குரலை எல்லோரும் கேட்பதற்கான வேளையை குறிப்பிடும்போது, "காலம் வருகிறது" என்னும் வார்த்தையை யோவான் பயன்படுத்துகிறார். இந்தப் வசனங்களில் "காலம்" என்னும் வார்த்தை, இயேசுவையும், அவரது போதனைகளையும் நேரடி தொடர்புபடுத்திக் குறிப்பிடப்படுகின்றது.

3) இந்த இறுதி இரவு உணவு நிகழ்வில் நம் கவனத்தை ஈர்க்கின்ற முக்கிய கருத்து "இயேசுவின் நேரம்" ஆகும். இந்த "நேரம்", நமக்காக இயேசு தன்னுயிரையே மனமுவந்து பலியாகக் கையளிக்கவும், அதன் பின்னர், உயித்தெழுத்தலில் மாட்சி பெறவும் இருக்கின்ற நேரம். குறிப்பிட்ட இந்த நேரம் இறைதந்தையால் முடிவு செய்யப்பட்ட நேரமாகும். யோவான் நற்செய்தி இரண்டாம் அதிகாரம் 4-ஆம் வசனத்திலும் இந்த "குறிக்கப்பட்ட நேரம்" பற்றிய உரையாடல் உள்ளது. கானாவூர் திருமணத்தின்போது "திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது" என்று மரியா சொல்லும்போது,, இயேசு தன் தாயிடம், "எனது நேரம் இன்னும் வரவில்லையே"என்று கூறுகிறார். மேலும், ஏழு மற்றும் எட்டு அதிகாரங்களில் இயேசுவுக்கு தீங்கிழைப்பதற்காக அவருடைய பகைவர்கள் அவரைப் பிடிக்க முயன்ற சமயகளில், "அவர்கள் இயேசுவைப் பிடிக்க முயன்றார்கள். எனினும், அவருடைய நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைத் தொடவில்லை" (7:30), "அவரது நேரம் இன்னும் வராததால் யாரும் அவரைப் பிடிக்கவில்லை". (8:20) என்று யோவான் குறிப்பிடுகிறார்.

இயேசு மாட்சிமை அடையும் நேரமே அவருக்கெனக் குறிக்கப்பட்ட நேரம் ஆகும். சிலுவையில் அறையப்பட்டு உயர்த்தப்படும்போது

இயேசுவின் மாட்சிமை உண்மையான நிறைவை அடைகிறது. யோவான் நற்செய்தியின் 13 முதல் 17 அதிகாரங்களில் 'மாட்சிமை' பல இடங்களில் திரும்பத் திரும்பக் குறிப்பிடப்படுகிறது. கடவுளின் நிலைபேறான மீட்புத் திட்டத்தில் நமக்காகத் தம் உயிரையே பலியாக்குவதற்கு, இரக்கம் மிகுந்த இறையன்பு இயேசுவை நடத்திச் சென்று, மாட்சிமை பெறச் செய்கிறது. இவ்வாறு இயேசு மாட்சி அடையும்போது இறைத்தந்தையும் மாட்சி அடைகிறார். மேலும், தன் பகைவர்களால் தான் சிறைபடுத்தப்பட இருக்கின்ற வேளையையும் (யோவான் 7:6,7; மாற்கு 14:35,41; லூக்கா 22:53) இதே 'நேரம்' என்ற வார்த்தையால் இயேசு குறிப்பிடுகின்றார்.

<u>அன்பு:</u>

இயேசுவின் வாழ்விலும், போதனைகளிலும் 'அன்பு' என்னும் கருத்தைக் குறித்து விவரித்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இயேசு மனிதனாக திருஅவதாரம் எடுத்தது கடவுள் மனிதர்மேல் கொண்ட ஆழமான அன்பின் வெளிப்பாடு எனத் தனது நற்செய்தியின் தொடக்கவுரையாகிய முதல் அதிகாரத்திலிருந்தே யோவான் எடுத்துரைக்கிறார். இந்த 'அன்பு' என்னும் கருத்து, யோவான் நற்செய்தியில் 13 முதல் 17 அதிகாரங்களில் ஏறக்குறைய 31 முறை கையாளப்பட்டாலும், அதற்கு முன்னுள்ள பன்னிரெண்டு அதிகாரங்களில் 12 முறையே காணப்படுகிறது. சீடர்களின் பாதங்களைக் கழுவிய பிறகு, 'தான் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பது போல அவர்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும்' என்று இயேசு கட்டளை கொடுக்கின்றார் (யோவான் 15:12, 17) இது ஒரு 'புதிய கட்டளை' என்று இயேசு சொல்லுகிறார் (யோவான் 13:34).

யூதத் திருச்சட்டத்தின்படி, இறைத்தந்தை தன் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையின் பத்துக் கட்டளைகளே (விடுதலைப் பயணம் 34:28) யூதர்கள் தவறாமல் கடைபிடிக்கவேண்டிய கட்டளைகள்.

'ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும்' என்னும் தனது கட்டளையை 'புதியக் கட்டளை' என்று குறிப்பிடுவதன் வழியாக, தான் தேர்ந்தெடுத்துக் கொண்டவர்களோடு இயேசு ஒரு 'புதிய

உடன்படிக்கை’யை ஏற்படுத்திக் கொள்கிறார். யோவான் நற்செய்தி 15:10 -ல் "என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்" என்று தன் கட்டளைகளைப் பன்மையில் குறிப்பிட்ட இயேசு, இறுதி இரவு உணவின்போது அவற்றையேல்லாம் ஒன்று சேர்த்து ஒரே கட்டளையாகத் தருகிறார். இந்தப் புதியக் கட்டளை அவர்களை மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் (யோவான் 13;35). "உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (லேவியர் 19:18) என்று பழைய ஏற்பாடு நூலில் அறிவுரை இருந்தாலும், அது ‘பழி வாங்குதல்’ என்னும் எண்ணத்திற்கு எதிரான அறிவுரையாக இருந்தது.

"உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள்" (மத்தேயு 5:39) என்று மலைப்பொழிவில் கூறிய போதே, பழிக்குப் பழி வாங்கும் விதிகளை இயேசு மாற்றி அமைக்கிறார். மத்தேயு 7:12-ல் "பிறர் உங்களுக்குச் செய்ய வேண்டும் என விரும்புகிறவற்றை எல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" என்னும் பொன்விதியை மொழிந்த இயேசு, இந்த நடைமுறையே இறைவாக்கு மற்றும் திருச்சட்டம் ஆகியவற்றின் நிறைவேற்றம் என்றும் கூறுகிறார். ஆயினும், “நான் உங்களை அன்பு செய்வது போல நீங்களும் ஒருவரையொருவர் அன்பு செய்யுங்கள்” என்ற இந்தப் புதியக் கட்டளை, எந்த வகையிலும் கடைபிடிப்பதற்கு இயலாத ஒரு அளவுகோலை வெளிப்படுத்துகின்றது. இயேசு நம்மை அன்பு செய்கின்ற அளவுக்கு நம் அயலாரை நம்மால் அன்பு செய்ய முடியுமா என்பது கேள்விக்குறியே. இயேசு தன் தந்தையை எந்த அளவு அன்பு செய்தார் என்பதை யோவன் தன் நற்செய்தி நூலின் 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்களில் பல இடங்களில் அழுத்தமாக விவரிக்கின்றார். இறைத்தந்தையை எந்த அளவு இயேசு அன்பு செய்தாரோ, அதே அளவு அன்பைத் தன் சீடர்கள் மேலும் கொண்டிருந்தார். தானும் இறைத்தந்தையும் ஒன்றாய் இருப்பது போல, தன் சீடர்கள் எல்லோரும் ஒன்றாய் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்புகிறார்.

இறுதி வரையும் அன்பு:

இறுதி இரவு உணவு நிகழ்ச்சிகளைத் தனது நற்செய்தியில் விவரிக்கின்ற திருத்தூதர் யோவான், 13-வது அதிகாரத்தின் ஆரம்பத்தில், "உலகில் வாழ்ந்த தமக்குரியோர் மேல் அன்பு கொண்டிருந்த அவர், அவர்கள்மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார்" என்று எழுதுகிறார். "தமக்குரியவர்கள்" என்னும் வார்த்தையைத் தனது நற்செய்தியின் 1:11-ல் "அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள். அவரை ஏற்றுக்கொள்ளவில்லை" என்று சொல்வதற்கும், இங்கு 13-ஆம் அதிகாரத்தின் தொடக்கத்தில் அந்த வார்த்தையைப் பயன்படுத்துவதற்கும் மிகப் பெரிய வேறுபாடு இருப்பது புலப்படுகிறது. இயேசு நம்மையெல்லாம் இறுதிவரை முழுமையாக அன்புசெய்தார்! தமக்குரியவர்கள் மேல் இயேசு கொண்டிருந்த அன்பு, அவருடைய இறப்பில் உச்சநிலை அடைவதையே யோவான் இங்குக் குறிப்பிடுகிறார் என்பது, அடுத்த நாள் சிலுவையில் தன் உயிரை விடுவதற்கு சற்று முன்னதாக "எல்லாம் நிறைவேறிற்று (19:30) என்று இயேசு சொல்லும்போது உறுதியாகிறது.

யோவான் நற்செய்தி தெய்வீக அன்பின் நற்செய்தி. அந்தத் தெய்வீக இறையன்பு இயேசுவை மரணத்திற்கு இழுத்துச் சென்றது. "அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிபோலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும்" என்று இறைவாக்கினர் எசாயா 53:7-ல் சொல்வது போலவும், "வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான செம்மறி போல்" என்று இறைவாக்கினர் எரேமியா 11:19 -ல் உரைப்பது போலவும், தன்னையே தியாகப் பலியாக இயேசு மனமுவந்து கையளித்திடச் செய்த பேரன்பு. கொல்கொதா என்னும் கொலைகளத்திற்கு இழுத்துச் செல்வதற்கு முன்னதாக இயேசு ஏளனமும், நிந்தனையும், கேலியும் அனுபவித்தார். காறி உமிழப்பட்டு, கசையால் அடிக்கப்பட்டு, நிர்வாணம் என்னும் நிலைக்கு ஆடைகள் களையப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார். கசப்பு மிக்கக் கீழ்த்தரமான காடியை குடித்து, இரண்டு குற்றவாளிகளோடு சிலுவையில் ஆணிகளால் அறையப்பட்டு, தாங்கொண்ணா வேதனைகளை அனுபவித்த பிறகு தன் உயிரைப் பலியாக்கினார். உரோமை சாம்ராஜ்ஜியத்தில் ஒரு

குற்றவாளிக்கு, அதுவும் ஒரு அடிமைக்குக் கொடுக்க வேண்டிய மிக மோசமான அருவருக்கத் தக்க தண்டனையாகச் சிலுவை மரணம் கருதப்பட்டது.

"மரத்திலே தொங்கவிடப்பட்டவன் கடவுளால் சபிக்கப்பட்டவன்" என்று இணைச்சட்டம் 21:23—ல் வாசிக்கிறோம். இந்த விவிலிய வாக்கியத்திற்கு விளக்கம் சொல்ல முனைந்த திருத்தூதர் பவுல், "மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர்" என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார்" என்று கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் (3:13) குறிப்பிடுகின்றார். மேலும், இறைமகன் இயேசு எந்த அளவு கீழான நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக் கொண்டார் என்பதை விவரிக்கும்போது, "கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி, சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக்கொண்டார்" என்று திருத்தூதர் பவுல் பிலிப்பியர் 2:8-ல் எடுத்துரைக்கின்றார். ஆக, எல்லா விதத்திலும் ஒரு மனிதனை இழிவுசெய்து, அவமானப்படுத்துகின்ற குரூரமான மரணமாகிய சிலுவைச் சாவை இயேசு ஏற்றுக்கொண்டதால், "தமக்குரியோர் மேல் இறுதிவரையும் அன்பு செலுத்தினார்" என்று யோவான் இங்குக் குறிப்பிடுகிறார்.

நம் மீது இயேசு கொண்டிருந்த அன்பு, வன்முறையும், கொடுமையும், அவமானமும் நிறைந்த மரணத்தை ஏற்றுக்கொள்ள அவரைத் தூண்டுகின்றது. யோவான் 15:13-ல் "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்ற இயேசுவின் வார்த்தைகள் இதனை உறுதிபடுத்துகின்றன. மேலும், திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில் (5:6-8) இதுகுறித்த தனது கருத்தைக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்: "நாம் இறைப்பற்றின்றி வலுவற்று இருந்தபோதே, குறித்த காலம் வந்ததும் கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். நேர்மையாளருக்காக

ஒருவர் தம் உயிரைக் கொடுத்தலே அரிது. ஒருவேளை நல்லவர் ஒருவருக்காக யாரேனும் தம் உயிரைக் கொடுக்கத் துணியலாம். ஆனால், நாம் பாவிகளாய் இருந்தபோதே கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார்"

யோவன் நற்செய்தி 13-ஆம் அதிகாரத்தின் முதல் வசனத்தை மட்டுமே நாம் இதுவரை ஆழமாகக் கவனத்தில் எடுத்து ஆய்ந்து பார்த்திருக்கிறோம். அடுத்த வசனத்தில், யூதாசு இஸ்காரியோத், அலகை, காட்டிக் கொடுக்கும் எண்ணம் ஆகியவையும் இரவு உணவோடு நெருக்கமான தொடர்பு கொண்டிருப்பதை காண்கிறோம். மறுநாள் கல்வாரியில் உச்சம் அடைய வேண்டிய ஒரு தொடர் சங்கிலியாக இந்நிகழ்வுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. பரிசேயர்களோடு யூதாசு செய்திருந்த சதியைக் குறித்து யோவான் விரிவாகப் பதிவு செய்யவில்லை. ஆயினும், மத்தேயு (26:14-16), மாற்கு (14:10-11), மற்றும் லூக்கா (22:3-6) ஆகிய நற்செய்தியாளர்கள் இதனைப் பதிவு செய்துள்ளார்கள். "பன்னிருவருள் ஒருவனான யூதாசு எனப்படும் இஸ்காரியோத்துக்குள் சாத்தான் புகுந்தான்" என்று லூக்கா (22:3) எழுதுவது, யோவான் 13:2, 27 ஆகிய வசனங்களில் சொல்வதற்கு ஒத்துபோகிறது. இயேசுவுடைய பொதுவாழ்வின் தொடக்கத்தில் தனது சோதனைகளில் அவரைச் சிக்கவைக்க முயன்று தோல்வியடைந்த அலகை, இப்போது தனது சூழ்ச்சியை முழுபலத்தோடு மும்முரமாகச் செய்வதற்கு தயாராக இருந்தது. தனது நற்செய்தியின் 13-ஆம் அதிகாரத்தின் அடுத்த வசனத்தில், "தந்தை அனைத்தையும் தம் கையில் ஒப்படைத்துள்ளார் என்பதையும் தாம் கடவுளிடமிருந்து வந்தது போல் அவரிடமே திரும்பச் செல்ல வேண்டும் என்பதையும்" இயேசு அறிந்திருந்தார் என்று யோவான் குறிப்பிடுகிறார்.

மேற்சொன்ன அனைத்தையும் முற்றிலும் அறிந்திருந்த இயேசு, தான் இதுவரை செய்யாத, தனது தலைமைப் பண்புக்குப் பொருத்தமற்ற ஒன்றை, அதாவது தன் சீடர்களின் பாதங்களைக் கழுவுகின்ற செயலை, செய்யத் தொடங்கினார். யூதேயாவில் இயேசு வாழ்ந்த காலத்தில் பாதங்களைக் கழுவுகின்ற வேலையை அடிமைகள் கூடச் செய்வதில்லை. இப்போது இயேசு அதனைச் செய்ய முன்வந்ததை,

தனது நற்செய்தி **13:4**—ல் "இயேசு பந்தியிலிருந்து எழுந்து, தம் மேலுடையைக் கழற்றி வைத்துவிட்டு ஒரு துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டார்" என்று யோவான் எழுதுகிறார். தமிழ் மொழிபெயர்ப்பில் "மேலுடை" என்று இருந்தாலும், ஆங்கிலத்தில் "**outer garments**" என்று பன்மையில் குறிப்பிடப்படுகிறது. இதன் உண்மையான அர்த்தம் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தலாம். ஆம்! மேலங்கியை மட்டுமல்ல; அந்தரங்கத்தை மறைப்பதற்காக இடுப்பில் கட்டப்படுகின்ற சிறிய துணியைத் தவிர, தான் அணிந்திருந்த மற்ற ஆடைகள் எல்லாவற்றையும் களைந்துவிட்டு, ஒரு துண்டை எடுத்துத் தன் இடுப்பில் கட்டிக்கொள்கிறார். இந்த நிலையை, யோவான் **19:23-24** வசனங்களோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அங்கே கொல்கொதாவில் படைவீரர்கள் இயேசுடைய எல்லா உடைகளையும் களைந்துவிட்டு ஆடையற்ற வெற்றுடம்போடு தான் அவரைச் சிலுவையில் அறைந்தார்கள். அந்த ஆடைகளைத் தான் வீரர்கள் தங்களுக்குள் பங்குபோட்டுக் கொண்டார்கள். ஆக, இரவு உணவின்போது இயேசு தனது ஆடைகள் அனைத்தையும் களைந்து நின்ற கோலம், மறுநாள் தான் சிலுவையில் தொங்கப்போகின்ற நிலையை மறைமுகமாகக் குறிப்பிட்டது என்றே சொல்ல வேண்டும்! பிறகு, ஒரு குற்றேவல் செய்வோன் செய்ய வேண்டிய வேலையைப் போல, சீடர்களின் பாதங்களைக் கழுவியபின் துடைப்பதற்காக ஒரு துண்டை இடுப்பில் கட்டிக்கொள்கிறார்.,

மத்தேயு **16:16-**ல் "நீர் மெசியா, வாழும் கடவுளின் மகன்"என்று இயேசுவின் தெய்வீகத்தன்மைக்கு சான்று பகர்ந்த சீமோன் பேதுரு, இத்தகைய ஆடைகள் களைந்த நிலையில் இயேசுவைக் கண்டதால் அதிர்ச்சி அடைகிறார். மேலும், யோவான் **6:68-**ல் "நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம்தானே உள்ளன" என்று அறிக்கையிட்டவர் பேதுரு. இப்போது ஒரு அடிமையைவிடக் கேவலமாகத் தன் தலைவன் தன் பாதங்களைக் கழுவ முனைவதை சீமோன் பேதுருவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. "நான் உன் காலடிகளைக் கழுவாவிட்டால் என்னோடு உனக்குப் பங்கு இல்லை"என்று இயேசு கூறிய பிறகு தான், பேதுரு தன் எதிர்ப்பைக் கைவிடுகிறார். இறைப்பற்றுள்ள ஒரு யூதனுக்கு யாவே கடவுள் தான் உரிமைச் சொத்து. "ஆண்டவர்தாமே என் உரிமைச் சொத்து" என்று

திருப்பாடல் **16:5**-லும், "ஆண்டவரின் பங்கு அவர்தம் மக்களே" என்று இணைச்சட்டம் **32:9**-லும் பார்க்கிறோம். எனவே, ஒவ்வொரு யூதனுக்கும் முழுமையான பாதுகாப்பும், ஆதரவும் ஆண்டவர் மட்டுமே. கடவுளுடைய பாதுகாப்பிலும், ஆதரவிலும் தனக்குரிய பங்கை இழந்துவிட சீமோன் பேதுருவுக்கு மனமில்லை. தன் சீடர்களின் பாதங்களைத் தான் கழுவ வேண்டும் என்பதை சீடர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். இதன் மூலமாக, தனது இறுதிநிலை தியாகமாகிய சிலுவை மரணத்தையும் சீடர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இயேசுவின் விருப்பமாக இருந்தது. உச்சக்கட்ட அவமானமாகிய சிலுவைச் சாவுக்கு முன்னறிவிப்பாக இந்தப் பாதம் கழுவும் நிகழ்வு அமைந்திருந்தது.

தலைவராகத் தங்களை வழிநடத்திய இயேசு, இப்போது தங்கள் காலடிகளைக் கழுவிட முற்பட்ட இந்த நேரத்தில், மற்ற சீடர்களின் மனங்களில் சுழன்றோடிய எண்ணங்களை நாம் சிந்திக்க வேண்டும். பேதுருவின் உள்ளதில் எழுந்த அச்சத்தை மற்ற சீடர்களும் உணர்ந்தார்களா? யோவானின் நற்செய்தி நூலில் மற்ற சீடர்களின் உணர்வுகளைப் பற்றிய குறிப்புகள் ஏதும் இல்லை. தன் சீடர்களின் பாதங்களை இயேசு கழுவுகின்ற நிகழ்ச்சி ஏனைய மூன்று நற்செய்தி நூல்களிலும் விவரிக்கப்படவில்லை. ஆதலால், இதற்கு ஒத்திசைவான குறிப்புகள் திருவிவிலியத்தில் வேறு நூல்களில் இல்லை. ஆகவே, நாம் சற்று பின்னோக்கி செல்லவேண்டியது அவசியமாகிறது. பாஸ்கா விழாவுக்கு ஆறு நாள்களுக்கு முன்னதாக, பெத்தானியாவில் இருந்த சகோதரிகள் மார்த்தா-மரியா ஆகியோரின் வீட்டிற்கு இயேசு சென்றார். அங்கே, பாசமும், பணிவும் நிறைந்த, வழக்கத்திற்கு மாறான ஒரு செயலை மரியா செய்கிறார். இலாமிச்சை என்னும் கலப்பற்ற மிகவும் விலையுயர்ந்த நறுமணத்தைல சிமிழைத் திறந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார்.

"விலையுயர்ந்த தைலம் வீணாவதைக் கண்டு அங்கிருந்த சிலர் கோபமடைந்தார்கள்" என்று மத்தேயுவும் **(26:8)** மாற்குவும் **(14:4)** தங்கள் நற்செய்தியில் எழுதுகிறார்கள். ஆனால், யோவான் யூதாஸின் பெயரைக் குறிப்பிட்டு "இந்தத் தைலத்தை முந்நூறு தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?"

என்று யூதாஸ் கேட்டதாகச் சொல்கிறார். அற்பமான சிறிய தொகைக்கு இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் தயாராயிருந்த யூதாஸ் இஸ்காரியோத்து, முந்நூறு வெள்ளி காசுகள் அளவுக்கு விலையுயர்ந்த நறுமணத் தைலம் அங்கே வீணாக்கப்பட்டதைக் கண்டு திடுக்கிட்டுக் கோபமடைந்தான். ஆனால், ஒரு கடைநிலை ஊழியன் செய்ய வேண்டிய காலடிகளைக் கழுவுகின்ற வேலையைத் தலைவனாகிய இயேசு செய்ய வந்தபோது, எந்தவொரு முணுமுணுப்புமின்றி யூதாஸ் ஏற்றுக்கொண்டான்.

சீடர்களுடைய காலடிகளைக் கழுவியபின் தம் மேலுடையை அணிந்துகொண்டு மீண்டும் பந்தியில் அமர்ந்து தன் உரையாடலை மேற்கொண்டு தொடர்ந்த இயேசு, "நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" என்று கூறினார். "சீடர்களும் ஒருவர் மற்றொருவரின் பாதங்களைக் கழுவ வேண்டும்" என்று இயேசு அறிவுறுத்தியதாக அவருடைய இந்தப் போதனை பாரம்பரியமாகக் கருதப்பட்டு வந்தது. ஒவ்வொரு ஆண்டும் புனித வியாழனன்று கத்தோலிக்கத் திருஅவையின் மாலை திருவழிபாட்டின் ஒரு முக்கிய பகுதியாக இந்த "பாதம் கழுவும் சடங்கு" இன்றைக்கும் கடைபிடிக்கப்படுகின்றது. தாழ்ச்சியோடும், பணிவோடும் ஒருவருக்கொருவர் பணிவிடை செய்வது குறித்த அறிவுரைகள் புதிய ஏற்பாட்டு நூல்களில், குறிப்பாக நான்கு நற்செய்தி நூல்களில் ஏராளமாக உள்ளன. ஆயினும், மிகுந்த தாழ்ச்சியோடு இயேசு செய்த இந்தச் செயல் ஆழமான உட்பொருளைக் கொண்டதாக உள்ளது. இறைத்தந்தையால் குறிக்கப்பட்டத் தன்னுடைய உச்சக்கட்ட அவமானமாகிய பாடுகளின் நேரம் மிகவும் அண்மையில் இருப்பதை இயேசு அறிந்திருந்தார். எனவே, 'பாதங்களைக் கழுவுதல்' என்னும் முன்மாதிரியை செய்து காட்டியதன் வழியாக, உலக மாந்தர் அனைவருக்காகவும் தன் உயிரைப் பலியாகத் தர இருக்கின்ற தன்னுடைய தியாகத்தையும் தன் சீடர்கள் பின்பற்ற வேண்டும் என்று விரும்பினார்.

இவ்வுலக மக்கள் எல்லாருக்காகவும் முழுமையுமான, ஒப்பற்ற தியாகத்தைச் செய்வதற்கு ஆண்டவரும் போதகருமானத் தன்னை நடத்திச் செல்கின்ற அன்பின் அடிச்சுவட்டை தன் சீடர்களும் கருத்தில்

கொண்டு கடைபிடிக்க வேண்டும் என்று இயேசு எதிர்பார்க்கிறார். தலைவராகியத் தன்னுடைய தியாகத்தின் உச்சக்கட்டத்தின் இறுதிநிலையை சீடர்கள் உணர்ந்து கொள்வதற்கு தெளிவான சான்றாகவும், முன்னுதாரணமாகவும் இந்தப் பாதம் கழுவும் நிகழ்வை இயேசு செய்து காட்டுகிறார். தனக்காகவும், தன்னைப் பின்பற்றுபவர்களுக்காகவும் தங்கள் உயிரையும் தியாகம் செய்யச் சீடர்கள் தயாராக இருக்க வேண்டும் என்பதை சுட்டிகாட்டுவதற்காக, "நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" என்று இயேசு சொல்லுகிறார்.

எனவே, யோவான் 13:17-ல் "இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்" என்று கூறும்போது, "வழக்கமான ஆசீர்வாதங்களுக்கும் மேலான இறைஇரக்கத்தின் பேற்றினை பெறுவீர்கள்" என்னும் ஆழமான பொருளை இயேசு வலியுறுத்துகிறார். மத்தேயு, லூக்கா நற்செய்திகளில் "மலைபொழிவு" பகுதியில் இதே பொருளைச் சுட்டிகாட்டுகின்ற "பேறுபெற்றோர்" என்னும் வார்த்தையைக் காண்கிறோம். "பேறுபெற்றோர்" என்ற சொல்லை இறுதி இரவு உணவின்போது இந்த இடத்திலும், உயிர்த்தெழுந்தபிறகு சீடர்களுக்குத் தோன்றும்போது "காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்"(யோவான் 20:29) என்று தோமாவிடமும் இயேசு கூறுவதாக யோவான் எழுதுகிறார். "நான் செய்தது போல நீங்களும் செய்ய வேண்டும்" என்று இயேசு சொன்னது இறுதி இரவு உணவின்போது கூடியிருந்த சீடர்களுக்கு மட்டுமல்ல; வருங்காலத்தில் தன்னை பின்பற்ற இருக்கின்ற எல்லாரும் தான் செய்துகாட்டிய முன்மாதிரியை கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகவே இந்தக் கட்டளையைத் தருகிறார். ஆகவே, சீடர்களின் பாதங்களைக் கழுவியதன் வழியாக இயேசு செய்துகாட்டிய முன்மாதிரி, அவர் நம்மீது கொண்ட அளவற்ற அன்பின் விளைவான தியாகத்தின் அடையாளமாக அமைகிறது.

தனது நற்செய்தி நூல் 13:17-ல்"இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்" என்று இயேசு

மொழிந்த அறிவுரைக்கு மேலே சொல்லப்பட்ட விளக்கம் சரியானது தான் என்பதை உறுதி செய்யும் வகையில், யோவான் தனது முதல் திருமுகம் 2:6-ல் "அவரோடு இணைந்திருப்பதாகக் கூறுவோர் அவர் வாழ்ந்தவாறே வாழக் கடமைப்பட்டவர்கள்" என்று எழுதுகிறார். இறுதி இரவு உணவின்போது இயேசு உரைத்ததற்கும், தனது திருமுகத்தின் வாயிலாக யோவான் சொல்வதற்கும் இடையே ஒரு நீண்ட கால இடைவெளி இருந்ததால், தான் எழுதுவது ஒன்றும் புதிய கட்டளை அல்ல; ஏற்கனவே சொல்லப்பட்ட பழைய கட்டளை தான் என்பதை இதே திருமுகத்தில் 2:7 வரசனத்தில் "நான் உங்களுக்கு எழுதுவது புதியதொரு கட்டளை அல்ல; நீங்கள் தொடக்கத்திலிருந்தே பெற்றிருந்த பழைய கட்டளை தான்" என்று வலியுறுத்துகிறார். ஆயினும், இயேசுவின் இந்தக் கட்டளையின் ஆழமான உட்பொருளை இதே திருமுகத்தில் 3:16 வசனத்தில் "கிறிஸ்து நமக்காகத் தம் உயிரைக் கொடுத்தார். இதனால், அன்பு இன்னதென்று அறிந்து கொண்டோம். ஆகவே, நாமும் நம் சகோதரர் சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று எழுதுகிறார்.

<u>காட்டிக் கொடுக்கத் தயாராக இருந்த யூதாஸ்:</u>

இறுதி இரவு உணவின்போது, அன்றைய பின்னிரவில் நடைபெற இருக்கின்ற இரண்டு நிகழ்ச்சிகளை இயேசு முன்னறிவித்ததை இந்த இடத்தில் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியமாகிறது. இரவு உணவு நடைபெற்ற நேரத்தில், இயேசு பந்தியிலிருந்து எழுந்து சீடர்களின் பாதங்களைக் கழுவினார். அதன் பிறகு இயேசு தம் மேலுடையை அணிந்துகொண்டு மீண்டும் பந்தியில் வந்து அமர்ந்ததால், உணவுப் பந்தி இன்னும் முடிவுறவில்லை என்பது தெளிவாகிறது. நண்பர்களும், உறவினர்களும் ஒன்றிணைந்து உணவருந்துகின்ற அந்தச் சிறப்பு விருந்து, அவர்கள் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்கின்ற அன்பின் நெருக்கத்தையும், தோழமை உணர்வையும் உறுதி செய்கின்ற நிகழ்வாகும். இத்தகைய சூழ்நிலையில், இயேசு உள்ளம் கலங்கியவராய் "உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்"என்று திட்டவட்டமாகக் கூறினார். "அனைவரும் தூய்மையாய் இல்லை" என்று இயேசு ஏற்கனவே சொன்னதன் (யோவான் 13:10) தொடர்ச்சியாக இது அமைகிறது. பந்தியில் இருந்த சீடர்கள் குழப்பமடைந்திருந்த அந்த நேரத்தில்,

இந்த வார்த்தையை இயேசு அங்கேயிருந்த எல்லாரையும் நோக்கிச் சொல்லவில்லை என்பது, "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்"என்று அவர் சொல்கின்ற அடுத்த வசனத்தில் தெரிகிறது.

இயேசுவின் இந்த வார்த்தைகள் திருப்பாடல் **41:9**-ல் நாம் வாசிக்கின்ற "என் உற்ற நண்பன், நான் பெரிதும் நம்பினவன், என் உணவை உண்டவன், எனக்கு இரண்டகமாகத் தம் குதிகாலைத் தூக்குகின்றான்" என்னும் வரிகளுக்கு முழுமையாக இல்லாவிடினும் ஓரளவு ஒத்திருப்பதாகத் தோன்றுகிறது. பொதுவாக யார் மீது மிகுந்த நம்பிக்கை வைக்கிறோமோ, அவரே உற்ற நண்பனாக இருக்க முடியும். அதைப் போன்ற ஆத்மார்த்தமான நண்பர்களையே உடன் அமர்ந்து உணவு உண்ண அழைப்பது அக்கால யூதர்குல வழக்கம். அவ்வாறு நம்பிய நண்பன் தன்னை அழைத்தவரை வீழ்த்துவதற்கு தன் குதிகாலைத் தூக்குவது என்பது அவரை நிராகரிப்பதற்கு ஒப்பாகும். இது போன்ற நிகழ்வு நினைத்துப் பார்க்கமுடியாத ஒன்று. இந்தக் கருத்தைத் தான் இயேசு தன் சீடர்களை நற்செய்தியை பறைசாற்ற அனுப்பும்போது, "உங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களுடைய நகரைவிட்டுப் புறப்படும்போது உங்கள் கால்களில் படிந்துள்ள தூசியை உதறிவிடுங்கள். இதுவே அவர்களுக்கு எதிரான சான்றாகும்"(லூக்கா **9:5**) என்று சொல்லுகிறார். யூதாஸின் மனநிலையும் இது போன்ற குற்றத்தைச் செய்வதற்கு அவனைத் தூண்டியிருந்தது.

"உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்"என்று இயேசு கூறியதைக் கேட்ட சீடர்கள் எல்லாரும் மிகுந்த வேதனையும் வருத்தமும் அடைந்தார்கள். தோழமை உணர்வோடு உணவருந்த பந்தியில் இருப்பவரே தன் தலைவரைக் காட்டிக் கொடுக்கின்றத் தீச்செயலை செய்யவிருக்கிறார் என்பதை அறிந்த சீடர்கள் வருத்தமுற்று, ஒருவர் பின் ஒருவராக, "நானோ?நானோ?" என்று இயேசுவிடம் கேட்கத் தொடங்கினார்கள் (மாற்கு **14:19**). யூதாசும் "ரபி, நானோ?" என அவரிடம் கேட்க இயேசு,"நீயே சொல்லிவிட்டாய்"என்று கூறினாரென மத்தேயுவும் **(26:25)**, "அப்பொழுது அவர்கள், "நம்மில் இச்செயலைச் செய்யப் போகிறவர்

யார்"என்று தங்களுக்குள்ளே கேட்கத் தொடங்கினார்கள்" என்று லூக்காவும் **(22:23)** எழுதுகிறார்கள். இங்கு யோவான் நற்செய்தி நூலில் மட்டும் சீடர்களிடையே எழுந்த இந்தச் சந்தேகத்தை இயேசு உடனே தீர்த்து வைக்கிறார். "நான் யாருக்கு அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ அவன்தான்" எனச் சொல்லி, அப்பத்துண்டைத் தோய்த்துச் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசுக்குக் கொடுத்தார்" என்று யோவான் **(13:26)** குறிப்பிடுகிறார்.

இந்த இடத்தில் திருத்தூதர் யோவான் பயன்படுதுகின்ற "துண்டு" என்னும் வார்த்தை முக்கியத்துவம் பெறுகிறது. "துண்டு" என்ற சொல்லை இங்குப் பயன்படுத்துவதன் மூலமாக, அந்தத் "துண்டு" அர்ச்சிக்கப்பட்ட முழுமையான அப்பத்திலிருந்து பிட்டு எடுக்கப்பட்ட ஒரு சிறு பகுதி என்பதை சுட்டிக் காட்டுகின்ற யோவான், அதனை **'**திருநற்கருணை**'**யின் மறைமுகக் குறியீடாகக் குறிப்பிடுகிறார் என்று கருதலாம். அப்பத்துண்டைப் பெற்றுக் கொண்டவுடனே, யூதாஸ் பந்தியிலிருந்து எழுந்து வெளியேறிச் செல்கின்ற நிகழ்ச்சி, அவன் தன் தலைவரைக் காட்டிக் கொடுக்கவிருந்த திட்டத்தின் தீவிரத்தை நமக்குப் புரிய வைக்கிறது. திருநற்கருணை என்னும் அருள்அடையாளத்தை இயேசு ஏற்படுத்தியதை ஏனைய மூன்று நற்செய்தி நூலாசிரியர்களும் தெளிவாக எழுதுகிறார்கள். சீடர்களின் பாதங்களை இயேசு கழுவியதை விரிவாகச் சொல்கின்ற யோவான், பிட்டுக் கொடுக்கப்பட்ட அப்பத் துண்டை யூதாஸுக்கு கொடுத்ததை சொல்வதன் வழியாக இயேசு திருநற்கருணையை நிறுவிய நிகழ்ச்சி ஏற்கனவே நிறைவுபெற்றதை மறைமுகமாகக் குறிப்பிடுவதாகத் தெரிகிறது. யோவான் நற்செய்தியின் **6-**ஆம் அதிகாரத்தை வாசிக்கும்போது, திருநற்கருணைக் குறித்த புரிதல் யோவான் மனதில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பது புலனாகிறது. மேலும், யோவான் நற்செய்தி **6-**ஆம் அதிகாரத்தின் **51** முதல் **58** வரையுள்ள வசனங்கள் இயேசு திருநற்கருணையை நிறுவிய நிகழ்வுக்கு வெகுபொருத்தமான, தெளிவான கருத்தாக அமைந்துள்ளன.

இறுதி இரவு உணவைப் போன்ற சிறப்பான பாஸ்கா விருந்து கொண்டாட்டத்தில் ஒன்றிணைந்து அமர்வதற்கும், அதற்கு

நேர்மாறாகத் தன் தலைவரையே காட்டிக் கொடுக்கின்ற திட்டத்திற்கும் இடையேயுள்ள முரண்பாடான தொடர்பினை நாம் கவனிக்க வேண்டும். இந்த இரண்டு வேறுபட்ட நிகழ்வுகளுக்கும் இடையே ஒரு உள்ளார்ந்த, தெளிவான தொடர்பு இருப்பதை நற்செய்தியாளர் யோவான் எடுத்துரைக்கிறார். இரவு உணவின்போது, ‘நெருங்கிய நண்பன்’ என்னும் பொருள் கொண்ட திருப்பாடல் **41:9** வசனத்தை இயேசு மேற்கோள் காட்டுகிறார். மரபுவழிக் செய்திகளின்படி இந்த வார்த்தை யூதாஸைக் குறிப்பதாகவே கருதப்பட்டாலும், அந்தப் பந்தியில் இயேசுவோடு பன்னிருவரும் அமர்ந்திருந்தார்கள் என்பது உண்மை. மத்தேயுவும், மாற்குவும் “பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார்” என்று எழுதுகிறார்கள். ஆனால், “திருத்தூதரோடு பந்தியில் அமர்ந்தார்” என்று லூக்கா எழுதுகிறார்.

அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாஸ்கா விருந்து சாதாரண உணவு உண்ணும் பந்தி அல்ல. “உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிக மிக ஆவலாய் இருந்தேன்” என்று இயேசு சொல்வதாக லூக்கா **(22:15)** குறிப்பிடுகிறார். கூடியிருந்த பன்னிருவருமே அந்தத் தனிசிறப்பு வாய்ந்த விருந்தில் பங்கேற்பதற்கு தகுதியுடைய நெருக்கமான நண்பர்களாக இருந்தார்கள். தன்னைப் பின்தொடர்ந்து வந்த பலருள் தனிப்பட்ட முறையில் ஆய்ந்து தனக்கு நெருக்கமானத் திருத்தூதர்களாக இயேசுவால் தேர்ந்து கொள்ளப்பட்ட பன்னிரண்டு சீடர்கள் அவர்கள். இறுதி இரவு உணவு நேரத்தில் சீடர்களுடன் உரையாடும்போது, அவர்கள் பன்னிருவரும் தன்னால் “தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்” என்று பலமுறை இயேசு வலியுறுத்திச் சொல்கிறார். அவ்வாறிருக்க, அந்தப் பன்னிருவரில் ஒருவர் தன் தலைவனை எதிரிகளுக்கு “காட்டிக் கொடுப்பான்” என்பது மிகக் கடுமையான எதிர்வினையாக உள்ளது.

யோவான் நற்செய்தி நூலின் **13-**ஆம் அதிகாரத்தின் இறுதியில் அப்பத்துண்டைப் பிட்டு யூதாஸுக்குக் கொடுத்தபிறகு, இயேசு அவனை நோக்கி “நீ செய்யவிருப்பதை விரைவில் செய்”என்று கூறுகிறார். தூண்டுதலைப் போன்ற இயேசுவின் இந்தக் கூற்று, யோவான் நற்செய்தி **6-**ஆம் அதிகாரத்தில் ‘திருநற்கருணை” குறித்த அவருடைய போதனை உரைக்கு மேலும் வலுவூட்டுகிறது. யோவான்

நற்செய்தியின் **6-**ஆம் அதிகாரத்தில் உள்ள சில வசனங்களை நாம் சற்று உற்று நோக்க வேண்டும். "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே" என்று **(6:58)** மொழிந்தபிறகு, பன்னிருவரில் ஒருவர் தன்னைக் காட்டிக் கொடுப்பான் என்பதையும் இயேசு அப்போதே திட்டவட்டமாகச் சொல்கிறார். "அப்படியிருந்தும் உங்களுள் சிலர் என்னை நம்பவில்லை"என்றார். நம்பாதோர் யார், யார் என்பதும் தம்மைக் காட்டிக்கொடுக்கவிருப்பவன் யார் என்பதும் இயேசுவுக்குத் தொடக்கத்திலிருந்தே தெரிந்திருந்தது" (யோவான் **6:64).** "பன்னிருவராகிய உங்களை நான் தேர்ந்துகொண்டேன் அல்லவா? ஆயினும் உங்களுள் ஒருவன் அலகையாய் இருக்கிறான்"என்றார். அவர் சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாசைப் பற்றியே இப்படிச் சொன்னார். ஏனெனில், பன்னிருவருள் ஒருவனாகிய அவன் அவரைக் காட்டிக் கொடுக்கவிருந்தான்" **(**யோவான் **6:70,71)**

இயேசுவைக் காட்டிக் கொடுக்கத் திட்டமிட்டிருந்தவன் என்று தான் குறிப்பிடுகின்ற நபரை நற்செய்தி நூலை வாசிப்பவர்கள் சந்தேகத்திற்கு இடமின்றி சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக **6:71** மற்றும் **13:26** ஆகிய வசனங்களில் "சீமோன் இஸ்காரியோத்தின் மகனாகிய யூதாஸ்" என்ற அடையாளச் சொல்லை யோவான் பயன்படுத்துகிறார். மேலும், **14:22-**ல் இயேசுவிடம் திருத்தூதர் யூதா (யூதா ததேயு) கேள்விக் கேட்பதை சுட்டிக்காட்டும்போது, "யூதா - இஸ்காரியோத்து யூதாஸ் அல்ல - மற்றவர்" என்று யோவான் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

<u>பேதுரு மறுதலிக்கப் போவதை முன்னுரைத்தல்:</u>
அடுத்ததாக, சீமோன் பேதுரு இயேசுவை மறுதலிப்பார் என்று இயேசு முன்னறிவிப்பதை யோவான் இந்த **13-**ஆம் அதிகாரத்தில் எழுதுவதை காண்போம். இயேசுவை பேதுரு மறுதலிப்பார் என்று இயேசு இரவு உணவின்போது முன்னறிவிப்பதையும், அன்றைய இரவில் அந்த நிகழ்ச்சி உண்மையிலேயே நடைபெறுவதையும் நான்கு நற்செய்தி நூலாசிரியர்களும் பதிவு செய்கிறார்கள். முற்றிலும் உண்மை தான் என்று ஐயந்திரிபற தான் துல்லியமாக அறிந்த உண்மையை 'இல்லை' என்று மறுப்பதையே பேதுருவின் செயல் குறிக்கிறது.

சீமோன் பேதுருவின் உச்சரிப்பும் பேச்சுமுறையும் அவர் கலிலேயாவைச் சேர்ந்தவர் என்பதைக் காட்டின. மேலும் கெத்சமனி தோட்டத்தில் இயேசுவுடன் அவர் இருந்ததை நேரிலே பார்த்தவர்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். "தன்னை யாரெனத் தெரியாது என்று பேதுரு மறுதலிப்பார்" என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி தெளிவாக இயேசு முன்னறிவித்திருந்தார். யோவான் நற்செய்தியின் **13:37, 38** வசனங்களில் இவ்வாறு வாசிக்கிறோம்: "பேதுரு அவரிடம், "ஆண்டவரே ஏன் இப்போது நான் உம்மைப் பின்தொடர இயலாது? உமக்காக என் உயிரையும் கொடுப்பேன்"என்றார். இயேசு அவரைப் பார்த்து, "எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்கிறேன்"

அடுத்ததாக, சீமோன் பேதுரு இயேசுவை மறுதலித்த நிகழ்வினைக் குறித்து யோவான் தனது நற்செய்தி நூலில் **(18:17, 18, 25-27)** எழுதியுள்ளதை பார்ப்போம்: "வாயில் காவல் செய்த அப்பணிப்பெண் பேதுருவிடம், "நீயும் இம்மனிதனுடைய சீடருள் ஒருவன் தானே?" என்று கேட்டார். பேதுரு, "இல்லை" என்றார். அப்போது குளிராய் இருந்ததால் பணியாளர்களும் காவலர்களும் கரியினால் தீ மூட்டி அங்கே நின்று குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். பேதுருவும் சென்று அவர்களோடு நின்று குளிர் காய்ந்து கொண்டிருந்தார்.... அப்போது அங்கிருந்தவர்கள் அவரிடம், "நீயும் அவனுடைய சீடர்களுள் ஒருவன் தானே" என்று கேட்டனர். அவர் "இல்லை" என்று மறுதலித்தார். தலைமைக் குருவின் பணியாளருள் ஒருவர், "நான் உன்னைத் தோட்டத்தில் அவரோடு பார்க்கவில்லையா?" என்று கேட்டார். பேதுருவால் காது வெட்டப்பட்டவருக்கு இவர் உறவினர். பேதுரு மீண்டும் மறுதலித்தார். உடனே சேவல் கூவிற்று". தன் தலைவராகிய இயேசுவை தனக்கு யாரெனத் தெரியாது என்று சீமோன் பேதுரு மூன்று முறை மறுதலித்த இந்த நிகழ்ச்சி நான்கு நற்செய்தி நூல்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. திருநற்கருணையை நிறுவுவதற்கு முன்னதாகவே, "பேதுரு தன்னை மறுதலிப்பார்" என்பதை இயேசு முன்னுரைத்ததாக மத்தேயுவும், மாற்குவும் எழுதுகிறார்கள். ஆனால், யோவான் எழுதுவதைப் போலவே,

திருநற்கருணையை நிறுவியபிறகு இந்த முன்னறிவிப்பை இயேசு சொல்வதாக லூக்கா எழுதுகிறார்.

"இன்று இரவு மும்முறை நீ என்னை மறுதலிப்பாய்" என்று இயேசு சொன்னவுடன், "நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்"என்று பேதுரு கூறியதாக மத்தேயுவும் (26:35), "எல்லாரும் ஓடிப்போய்விட்டாலும் நான் அவ்வாறு செய்யமாட்டேன்... "நான் உம்மோடு சேர்ந்து இறக்க வேண்டியிருந்தாலும் உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்" என்று லூக்காவும் (14: 29,31) எழுதுகிறார்கள். இவ்வாறு திட்டவட்டமாகக் கூறிய சீமோன் பேதுரு, அதற்கான நேரத்தை நேருக்கு நேராக எதிர்கொண்டபோது, தன் தலைவரின் மீதிருந்த புரிதலின் குறைபாட்டின் காரணமாக, இயேசு முன்னுரைத்தபடியே மறுதலிக்கிறார். "நீர் சொல்வது என்னவென்று எனக்குத் தெரியவில்லை"என்று சுற்றியிருந்த அனைவர் முன்னிலையிலும் பேதுரு மறுதலித்தது மட்டுமல்ல; "சபிக்கவும் ஆணயிடவும் தொடங்கினார்" என்று மத்தேயுவும், மாற்குவும் எழுதுகிறார்கள்.

தலைமைகுருவின் மாளிகை முற்றத்தில் பலர் இருப்பதைப் பொருட்படுத்தாமல், எல்லோர் முன்னிலையிலும் பேதுரு இயேசுவை மறுதலித்து பேசுகிறார். மக்கள் பலர் முன்பாகத் தனக்கு தெளிவாகத் தெரிந்த உண்மையை மறுதலிப்பதன் பின்விளைவு என்ன என்பது பேதுருவுக்குத் நன்றாகத் தெரியும். "மக்கள் முன்னிலையில் என்னை மறுதலிப்பவர் எவரையும் விண்ணுலகில் இருக்கிற என் தந்தையின் முன்னிலையில் நானும் மறுதலிப்பேன்" (மத்தேயு 10:33) என்று இயேசு சொல்லியிருப்பது பேதுரு அறிந்தது தான். தன் தலைவரை மறுதலிப்பதன் விளைவாகத் தான் அவருடைய சீடனாக இருக்க தகுதியற்றவன் என்பதுவும் பேதுருவுக்குத் தெரியும். அதனால் தான், அடுத்த கணத்திலேயே தன் தவறை உணர்ந்து, வேதனையும், துயரமும் மேலோங்க மாளிகையின் முற்றத்திலிருந்து வெளியே சென்று மனங்கசிந்து அழுகிறார். பேதுரு தன் குற்றத்தை உணர்ந்து மனம் வருந்தியதைக் குறித்து யோவான் எதுவும் சொல்லவில்லை. ஆனால், மத்தேயு (26:75) "சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்"என்று இயேசு கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து

வெளியே சென்று மனம் நொந்து அழுதார்" என்று எழுதுகிறார். லூக்கா இன்னும் ஒருபடி மேலே சென்று, (22:61, 62) "ஆண்டவர் திரும்பி, பேதுருவைக் கூர்ந்து நோக்கினார்: "இன்று சேவல் கூவுமுன் நீ என்னை மும்முறை மறுதலிப்பாய்"என்று ஆண்டவர் தமக்குக் கூறியதைப் பேதுரு நினைவுகூர்ந்து, வெளியே சென்று மனம் நொந்து அழுதார்" என்று எழுதுகிறார். பேதுருவைக் கூர்ந்து நோக்குகின்ற அந்த வேளையில் "தன் இரக்கம் அளவற்றது" என்பதைத் தன் பார்வையாலேயே இயேசு உணர்த்துகிறார்.

மார்ச் மாதத்தின் இறுதியில் அல்லது ஏப்ரல் மாதத்தின் துவக்கத்தில் எருசலேம் நகரத்தில். தாங்க இயலாத அளவுக்குக் குளிரான வானிலை நிலவிட வாய்ப்பு இல்லை. ஆகவே, நெருப்பின் அருகில் அமர்ந்து அந்த வெப்பத்தில் குளிரைத் தணித்துக் கொள்கின்ற கொஞ்ச நேர வசதியை அனுபவிப்பதற்காகப் பேதுரு தன் தலைவரை மறுதலித்திருப்பார் என்று எண்ண முடியாது. ஏற்கனவே முன்னிரவில் இயேசுவால் எச்சரிக்கப்பட்டிருந்தாலும், உண்மையை மறுதலிப்பதன் பின்விளைவுகளை அறிந்திருந்தாலும், மனித பலவீனத்தின் காரணமாகவே பேதுரு இந்தச் செயலைச் செய்ய முற்பட்டார் என்று நம்ப இடமிருக்கிறது.

<u>முடிவுரை</u>:
இயேசுவின் இறுதி இரவு உணவு நிகழ்வை நான்கு நற்செய்தி நூலாசிரியர்களும் பதிவு செய்திருந்தாலும், உள்ளடக்கத் தொகுப்பிலும், இறையியல் கருத்துகளிலும் அவை நான்கும் வேறுபடுகின்றன. குறிப்பாக, யோவான் நற்செய்தியின் ஐந்து அதிகாரங்களில் விவரிக்கப்படுகின்ற இந்த மாபெரும் நிகழ்வு, தனிப்பட்ட முறையில் நம் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது. திருஅவையின் தொடக்கக் காலத்திலிருந்தே உயர்வான அருள்அடையாளமாகப் போற்றப்படுகின்ற திருநற்கருணையை இயேசு நிறுவுகின்ற நிகழ்ச்சியை யோவான் தவிர்த்திருப்பது, நமக்கு வியப்பளிக்கிறது. கத்தோலிக்கத் திருஅவையின் திருவழிபாட்டு நிகழ்வுகளின் உச்சமாகப் போற்றப்படுகின்ற திருநற்கருணையை இயேசு ஏற்படுத்துகின்ற நிகழ்வினை குறிப்பிடாமல் விட்ட நற்செய்தியாளர் யோவான், அதற்குப் பதிலாக, அதற்கு இணையான முக்கியத்துவம் கொண்ட

மற்றொரு நிகழ்வான சீடர்களின் பாதங்களை இயேசு கழுவுகின்ற நிகழ்ச்சியை விரிவாகப் பதிவு செய்கிறார்.

இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல, தனது நற்செய்தியின் **13-**ஆம் அதிகாரத்தில் யோவான் விவரிக்கின்ற நிகழ்வுகளிலிருந்து இயேசு தனது மண்ணுலக வாழ்வின் முக்கியமான அடுத்த நிலையைத் தொடங்குகிறார். மனிதகுலத்தின் மீட்புக்காகத் தன்னையே தியாகபலியாக அர்ப்பணிப்பதற்காக இறைத்தந்தை குறித்து வைத்திருந்த நேரம் மிக அருகில் இருப்பது அவருக்குத் தெரிந்தது. அது தனக்கான நேரம் என்பதை இயேசு உணர்ந்து, அதனை மனமுவந்து எதிர்கொள்ளவும், ஏற்றுக்கொள்ளவும் தயாரானார். கடவுள்நிலையைத் துறந்து, மனிதனாக இவ்வுலகில் அவர் உதித்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டிய நேரம் அது. உலக மாந்தரின் பாவங்களுக்காகத் தன்னுயிரையே தரவேண்டிய நேரம் அது. இயேசுவின் சீடர்களும் அவரது வழிகாட்டுதலின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, அன்பின் ஆழத்தை உணரவும், பிறரோடு பகிர்ந்து கொள்ளவும், அந்த அன்புப் பகிர்வின் உச்சமாக இறுதியில் தங்கள் உயிரையும் தியாகபலியாகக் கையளிப்பதற்கு தயாராகவும் வேண்டும் என்று இயேசு விருப்பம் கொண்டார்.

இயேசுவின் பொதுவாழ்வில் கலிலேயாவிலிருந்து எருசலேம் வரை மூன்று ஆண்டுகளாக அவரோடு உடனிருந்து பயணித்த சீடர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுக்கிறார்; மற்றொருவர் அவரை மறுதலிக்கிறார். தனது நற்செய்தி நூலின் **13-**ஆம் அதிகாரத்தில் யோவான் விவரிக்கின்ற சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள், அவற்றின் கருப்பொருளின் இயல்பிலிருந்து மாறுபட்ட இந்த வேறு இரண்டு நிகழ்வுகளோடு நெருங்கிய தொடர்புடையவையாக எழுதப்பட்டுள்ளன. சீடர்களின் காலடிகளைக் கழுவுவதற்காகத் தன் உடைகளை இயேசு களைவது, அடுத்த நாள் இயேசுவை சிலுவையில் அறைவதற்காக அவரது உடைகள் களையப்பட இருப்பதை முன்னுரைக்கின்றது. தன் சீடர்களின் காலடிகளை ஒரு அடிமையைப் போல இயேசு கழுவிட முன்வந்தது, மறுநாள் மனிதகுலத்தின் பாவங்களின் பளுவையெல்லாம் தன் மேல் ஏற்றுக்கொண்டு, ஒரு கீழ்த்தரமான குற்றவாளியைப் போலக் கொல்லப்பட இருப்பதற்கு பொருத்தமான உருவகமாக

அமைகிறது. அன்றைய இராஉணவு நிகழ்ச்சிகளின் முத்தாய்ப்பாக இயேசு சொல்வதை கவனிப்போம்:

"ஆகவே, ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன். பணியாளர் தலைவரைவிடப் பெரியவர் அல்ல; தூது அனுப்பப்பட்டவரும் அவரை அனுப்பியவரை விடப் பெரியவர் அல்ல என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

**இவற்றை நீங்கள் அறிந்து அதன்படி நடப்பீர்கள் என்றால் நீங்கள் பேறுபெற்றவர்கள்"(யோவான் 13:14 - 17)**